**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 01.12.2025</u>**

**OS.272/2018**

**வா.சா.1 திருமதி.சாந்தி**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. சென்னகிருஷ்ணன் என்பவர் எனது கணவரின் தம்பி என்று சொன்னால் சரிதான். சதிஸ் என்பவர் சென்னகிருஷ்ணனின் மகன் என்றால் சரிதான். சென்னகிருஷ்ணன், சதிஸ், வெங்கடேசன் ஆகியோர் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலத்தில்தான் குடியிருக்கிறார்கள். பாகம் கேட்டு நோட்டிஸ் அனுப்பியது எந்த முகவரிக்கு, அவ்வாறு நோட்டிஸ் அனுப்பப்பட்டமுகவரி அவர்கள் தாவா சொத்தில் குடியிருந்து வரும் முகவரிக்கா என்றால் ஆமாம். நோட்டிஸ் அனுப்பப்பட்டது கேத்துநாய்க்கன்பட்டி கிராமம், மற்றும் அஞ்சல், சிங்காரப்பேட்டை வழி, ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்ற முகவரிக்கு என்றால் சரிதான். வெங்கடேசனின் சொந்த ஊர் எது என்றால் ஒடசல்பட்டிதான் சொந்தஊர். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அவர்களுக்கு கிடைக்கக்கூடாது என்பதற்காகதான் கேத்துநாய்க்கன்பட்டி கிராமத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல.

2. 1 முதல் 3 பிரதிவாதிகள்ளும் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அவ்வாறு கொடுக்கப்பட்ட பதில் அறிவிப்பில் எனது கணவருக்கு 30 சென்ட் தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் கொடுத்ததை மறைத்து சொல்லியிருப்பதாக அந்த அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, சேர்த்து தான் சொல்லப்பட்டுள்ளது. நான் உண்மைக்கு மாறாக சொல்கிறேன் எனது கணவருக்கு வெங்கடேசன் கொடுத்து 30 சென்ட் தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வெங்கடேசன் எனது கணவருக்கு கொடுத்த 30 சென்ட் சொத்தானது பின்னிட்டு எனக்கு கொடுக்கப்பட்டது அந்த சொத்தும் தற்போது என்னிடம் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி 30 சென்ட் நிலமானது விற்பனை செய்துவிட்டோம் என்ற தகவலையே இந்த வழக்கில் சொல்லாமல் மறைத்து விட்டோம் என்று சொன்னால் சரியல்ல, சொல்லப்பட்டுள்ளது.

3. தாவா சொத்துக்களும், எனது கணவருக்கு வெங்கடேசன் தானமாக கொடுத்த 30 சென்ட் நிலமும் எவ்வாறு பாத்தியம் என்றால் அது மூதாதையார் சொத்துதான். வெங்கடேசன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 பேர். 1. வெங்கடேசன், 2. புட்டாநாயுடு. மேற்படி வெங்கடேசன் மற்றும் அவர் உடன்பிறந்தவர்களுக்கு ஏற்கனவே பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் செய்துகொண்டார்கள். அவ்வாறு பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கு ஏதாவது ஆவணங்கள் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பதில்சட்ட அறிவிப்பு 1 முதல் 3 பிரதிவாதிகள்

தரப்பில் அனுப்பப்பட்டபோது தாவா சொத்துக்கள் வெங்கடேசனுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்று அவர் சொல்லியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது பூர்வீக சொத்துதான்.

4. தாவா சொத்துக்கள் நான் சொல்வதுபோல பூர்வீக சொத்து என்பதை காட்ட எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, கொடுத்துள்ளேன். தாவா சொத்துக்கள் அனைத்தும், வெங்கடேசன் 1980, 1990, 2011, ஆகிய ஆண்டுகளில் கிரையம் பெற்ற சொத்துக்கள் 2006 ம் ஆண்டில் வெங்கடேசனின் மனைவி சாந்தாவிற்கு தானபத்திரம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல பூர்வீக சொத்தாக இருந்தால் வெங்கடேசன் தனிப்பட்ட முறையில் சொத்துக்களை தானபத்திரம் எழுத கொடுக்க முடியாது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தது தவறு. எனது கணவருக்கு வெங்கடேசன் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்த அதேநாளில் வெங்கடேசனின் மகன் சென்னகிருஷ்ணனுக்கும் 18.06.2012–ம் தேதியில் சில சொத்துக்களை அரூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2767/2012–ன் படி தானபத்திரம் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் சரிதான், அந்த விவரம் எனக்கும், எனது கணவருக்கும் தெரியும். வெங்கடேசனுடக்கு தனிப்பட்ட சொத்து என்பதால்தான் அவருடைய சொத்தை அவர் விருப்பம் போல எழுதி கொடுத்துள்ளார் அதனை கேட்க சட்டப்படி எனக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

5. 2016–ம் ஆண்டில் வெங்கடேசன் அவரது மகன் சதீஸ் என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 83 சென்ட் நிலத்தை வெங்கடேசன் சதீஸ்சுக்கு எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. 2016–ல் சதீஸ்சுக்கு தானசெட்டில்மெண்ட்டை வெங்கடேசன் எழுதிவைத்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் இன்றிலிருந்து 7 வருடத்திற்கு முன்பு தெரியும், வருடம் எனக்கு நினைவில்லை, எனது மாமியார் உடல்நிலைசரியில்லாமல் இறந்தபோது எனக்கு தெரியும். எனது மாமியார் எந்த தேதி இறந்தார் என்றால் தேதி எனக்கு தெரியவில்லை, அவர் இன்றிலிருந்து 7 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார்.

6. சதிஸ் குமார் பெயரில் தானசெட்டில்மெண்ட் வெங்கடேசன் எழுதிகொடுத்த பிறகு அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அங்கு விசாரணை எல்லாம் நடந்தது என்றால் சரிதான். அவ்வாறு நடந்த விசாரணையில் வெங்கடேசனுக்கு பாத்தியப்ப்ட்ட தனிப்பட்ட சொத்த அவர் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என நாங்கள் எழுதி கொடுத்துவிட்டு வந்துவிட்டோம் என்றால் இல்லை. வெங்கடேசன் சதீசுக்கு சொத்து எழுதி வைத்துவிட்டார் என்று தெரிந்துதான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். சதீஸ், சென்னகிருஷ்ணன் ஆகியோருக்கு வெங்கடேசன் எழுதி 8வைத்த தானசெட்டில்மெண்ட் படி சதீஸ், சென்னகிருண்ணன் ஆகியோருக்கு பட்டா மாறிவிட்டது என்றால் சரிதான். அதேபோல வெங்கடேசன் எனது

கணவருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்தபடி எனது கணவர் பெயருக்கும் பட்டா மாறிவிட்டது என்றால் சரிதான். இதுநாள் வரை வெங்கடேசன் சதீஸ் பெயரில் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எனது நகை எல்லாம் விற்பனை செய்ததாக சொல்லியுள்ளேன் எவ்வளவு நகை என்றால் 5, 6 பவுன் இருக்கும். எந்த வருடம் விற்பனை செய்தேன் என்றால் தேதி தெரியவில்லை, இன்றிலிருந்து 10 வருடத்திற்கு முன்பு விற்பனை செய்தேன். அவ்வாறு நகையை யாருக்கு விற்பனை செய்தேன் என்றால் எனது அப்பாவிடம் கொடுத்து எனது அப்பாதான் விற்பனை செய்தார் அதை யாருக்கு விற்பனை செய்தார் என்று தெரியவில்லை. எவ்வளவு ரூபாய்க்கு அவ்வாறு நகை விற்பனை செய்யப்பட்டது என்றால் 2 இலட்ச ரூபாய்க்கு விற்பனை செய்துவிட்டார். 10 வருடத்திற்கு 1 பவுன் எவ்வளவு விற்பனை ஆனது என்றால் 6, அல்லது 7 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆனது. நான் சொல்வதுபோல எந்த பவுனும் எனது கணவரின் சிகிச்சைக்கு செய்யவில்லை, எனது கணவரின் சிகிச்சைக்காக எந்த நகையும் விற்பனை செய்து செலவு செய்யவில்லை, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா வீட்டில் இருந்து பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அது எவ்வளவு, எந்த தேதியில் அவ்வாறு கொடுத்தார் என்றால் சிறுக, சிறுக ரூ.4 இலட்சம்போல் கொடுத்தார்கள், 10 வருடத்திற்கு முன்பு அவ்வாறு சிறுக,

சிறுக கொடுத்தார்கள், தேதி எனக்கு நினைவில்லை. எனது அப்பா என்னவேலை செய்கிறார் என்றால் கூலிவேலை செய்கிறார்.

8. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பெண்கள், 1 ஆண். என்னையும் எனது உடன்பிறந்தவர்களையும் எனது அப்பா கூலிவேலை செய்துதான் பாதுகாத்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவருக்கு உண்டான சிகிச்சை செலவை வெங்கடேசன்தான் இன்றுவரை சண்டை சச்சரவுகள் இருந்தாலும் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எந்தெந்த ஊருக்கு எனது கணவரை சிகிச்சைக்காக அழைத்து சென்றேன் என்றால் கோயமுத்தூர், சேலம், பெங்களூர், சென்னை ஆகிய இடங்களுக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றேன். எவ்வளவு ரூபாய் செலவானது என்று ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது கணவருக்கு எந்த வித சிகிச்சையும் செய்யவில்லை, அதனால்தான் எனது கணவருக்கு சிகிச்சை அளித்ததற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால்தான் வெங்கடேசனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனது கணவர் கோதண்டராமனுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார், ஆனால் அதையும் எனது கணவரிடம் இருந்து ஏமாற்றி, மிரட்டி பறித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. வெங்கடேசன் எனது கணவருக்கு சொத்தை கொடுத்து அதில் விவசாயம் செய்து பிழைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னபோது

கூட அந்த சொத்தை எனது கணவரிடம் இருந்து எனது பெயருக்கு மாற்றி மாது என்பவருக்கு நான் விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது கணவர் உயிருடன் இருக்கும்போதே ஏதாவது சொத்தை ஏமாற்றி எனது மாமனாரிடம் இருந்து பெறவேண்டும் என்பதற்காகத்தான் இந்த வழக்கையே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. 2ம் பிரதிவாதி சென்னகிருண்ணனுக்கு 1 மகன், 1 மகள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு 2 குழந்தைகள் இருப்பதால் நானும், எனது கணவர் மட்டும் இருப்பதாரும் சென்னகிருண்ணனுக்கு கொஞ்சம் அதிகமான சொத்தையும், எனது கணவருக்கு குறைவான சொத்தையும் வெங்கடேசன் ஒதுக்கி கொடுத்துள்ளார்ள ன்றால் சரியல்ல. தாவா சொத்து அவருடைய தனிப்பட்ட சொத்து, அதில் பாகம் கேட்க எனக்கோ, எனது கணவருக்கோ, சென்னகிருஷ்ணனுக்கோ எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வெங்கடேசனின் தனிப்பட்ட சொத்தை 3ம் பிரதிவாதி சதிஸ் என்பவருக்கு தானம் கொடுத்துள்ளதால் அவ்வாறு தானம் கொடுக்கப்பட்ட ஆவணத்தை செல்லாது என்று கேட்க எந்த உரிமையும் எனக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வெங்கடேசனுக்கு தாவா சொத்துக்களானது தனிப்பட்ட சொத்து அதனால் அவர் வேறுயாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என்று பரிகாரம் கோருவது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

11. சொத்துக்காக வேண்டி நானும், எனது சார்பான ஆட்களும், வெங்கடேசனை அடித்து காயப்படுத்தி உள்ளோம் அதற்காக வெங்கடேசன்

சிகிச்சை எல்லாம் எடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.01 16:21:40 +0530